ஜனவரி 2026
மலர் 24, இதழ் 4

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்
ஆண்டு சந்தா
ரூ. 100/-

# தேவன் நமக்குத் தரும் சந்தானம்



# தேவன் நமக்குத் தரும் சந்தானம்

**தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை. (ஆதி. 15 : 3)**

ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அதில் உள்ள அங்கத்தினர்கள் மிகவும் முக்கியமானவர்கள். தகப்பன், தாய், மகன், மகள், தாத்தா, பாட்டி, பேரக்குழந்தைகள் எல்லோருமே குடும்பத்தை சிறப்பிக்க வந்தவர்கள். இந்த ஐக்கியத்தில் ஒருவர் பிரிந்தாலும் குடும்பத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டு விடும். இந்த குடும்பத்தின் தலைவன் தகப்பனாய் இருந்தாலும் ஞானியானவர் தேவன் தனக்குத் தந்த ஞானத்தினால் என்ன கூறுகிறார்?

**புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி. 14 : 1).**

**கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா (சங். 127 : 1)** புத்தியுள்ள பெண் தன்னுடைய கூடாரமாகிய வீட்டை நிர்வகிப்பதில் திறமையுள்ளவளாய் இருக்க வேண்டும். அதற்கு அஸ்திபாரத்தைப் போடுகிறவர் நம் தேவன். காரணம், **...ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று... (மத். 21 : 42).** குடும்பம் என்ற வீட்டை நடத்துவது குடும்ப ஜெபம் (Family Prayer). கூரை இல்லாத வீடாக நம்முடைய இல்லம் இருந்தால் காற்று, மழை, இடி, மின்னல் எல்லாமே வீட்டிற்குள் சுனாமியாகவும், பினாமியாகவும் நுழைந்து விடும். ஆகவே வீட்டின் அடிப்படைத் தளமான நம்முடைய வேதாகமம் தினமும் திறக்கப்பட வேண்டும், வாசிக்கப்பட வேண்டும், தியானிக்கப்பட வேண்டும், சிந்திக்கப்படவேண்டும், தேவனோடு பேச வேண்டும், உரையாட வேண்டும். மூடப்படாத, மூடக்கூடாத ஒரு புத்தகம் இந்த உலகத்தில் இருக்கிறதென்றால் அது வேதாகமம் ஒன்று மட்டுமே.

எத்தனை கோடி பணம் இருந்தாலும் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியமாக இருக்க வேண்டியது ஒன்று நிம்மதி, மற்றொன்று குழந்தைச் செல்வம் / சந்தானம்/ புத்திர சுவிகாரம்.

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்... (சங். 127 : 4) பெரிய வீட்டிலே நாம் மட்டும் குடியிருப்பது சந்தோஷம் கிடையாது. அந்த வீட்டில் நம் பிள்ளைகள், கர்த்தரால் கொடுக்கப்படும் சுதந்தரம், சந்தானம். கர்த்தர் அருளாவிட்டால் குழந்தைகள் கிடைக்காது. கர்த்தரால் கிடைக்கப்பெறும் குழந்தைகள் கர்ப்பத்தின் கனி கர்த்தரால் கிடைக்கும் பலன். நம்முடைய பிள்ளைகளை பாரமாய் எண்ணக்கூடாது. காரணம் குழந்தைகள் / சந்தானம் கர்த்தரால் கொடுக்கப்படும் ஈவுகள். எத்தனை குடும்பங்களிலே ஜமீன் என்று சொல்லும் அளவுக்கு பணம், சொத்து இருந்தாலும் சந்தானம் / வாரிசுகள் இல்லாவிட்டால் அதினால் பயன் ஒன்றுமில்லை. சந்தோஷம், மகிழ்ச்சி அங்கே நடமாட வாய்ப்பே இல்லை. சந்தானம் கிடைக்கப் பெற்றவர்கள் அவர்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தி அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். சந்தானம் பெற்று விட்டால் மட்டும் போதாது. ஏற்ற காலத்தில் சந்தானங்களை கர்த்தரின் இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்த வேண்டும். கர்த்தருக்குள்ளான பெற்றோர் தங்களுக்கு வாய்த்திருப்பது பிள்ளைகள் செய்த பெரிய பாக்கியம். காரணம், தேவனை அறியாத பெற்றோராயிருந்தால் குழந்தைகளுக்கு அவர்கள் இருந்தும் எந்தப் பிரயோஜனமும் கிடையாது. கர்த்தருக்குள்ளான பிள்ளைகளாயிருந்தால் அதைவிட சந்தோஷமும், ஆசீர்வாதமும் எதுவுமே கிடையாது.

**கர்த்தரின் அருள் சந்தானத்திற்கு எப்படித் தேவை?!**

**லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள் (ஆதி 29 : 31).**

மூன்றாவது முற்பிதாவானவரும், ஆபிரகாமின் பேரனுமான யாக்கோபு (இஸ்ரவேல்) ஆரானுக்கு வந்து இருபது வருடகாலமாக தன் மாமனாகிய லாபானின் வீட்டில் தங்கினான்.

**பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன் (ஆதி 31 : 41).**

ராகேலுக்காக மட்டும் பதினாலு வருடம் கூலிக்கு லாபானிடம் வேலை செய்த யாக்கோபு அவளை திருமணம் செய்து சந்தானம் இல்லாமல் இருப்பதைக் கண்டு தேவனிடம் ஜெபித்திருப்பார். லேயாளுக்கு நான்கு குழந்தைகள் பிறந்த பின்பும், ராகேல் பிள்ளை பெறாதிருந்தாள். ராகேல் தன் மூத்த சகோதரி பேரில் பொறாமை கொண்டு யாக்கோபோடு சண்டை போடுகிறாள்! ராகேலின் வார்த்தையைக் கேட்ட போது யாக்கோபு கோபம் கொண்டு ராகேலிடம் என்ன கூறினார்?

**தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனா? என்றான் (ஆதி 30 : 2).**

லேயாளின் வேலைக்காரி சில்பாள். ராகேலின் வேலைக்காரி பில்காள். ராகேலைத் தவிர மற்ற மூன்று பேர்களுக்கும் குழந்தைகள், பிள்ளைகள் பிறந்தனர். (லேயாளுக்கு 6+1, சில்பாள் 2, பில்காள் 2) அதன் பின் தேவன் ராகேலை நினைத்தருளினார்; ராகேலுடைய விண்ணப்பத்திற்கு / கோரிக்கைக்கு / ஜெபத்திற்கு தேவன் செவிகொடுத்து ராகேல் கர்ப்பந்தரிக்கும் படிச் செய்தார் (ஆதி 30 : 22).

தன்னுடைய வேலைக்காரிக்குக் கூட இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து விட்டன. எனக்கு மட்டும் ஒரு குழந்தை கூட பிறக்கவில்லையே என்று தேவனோடு எத்தனை நாள் போராடினாளோ தெரியாது. ஏற்ற காலத்தில் / நேரத்தில் உயர்த்தினார் நம் தேவன். என் நிந்தையை / அவமானத்தை என் தேவன் நீக்கி விட்டார் என்று சொல்லி தான் பெற்ற முதல் மகனுக்கு யோசேப்பு என்று பெயரிட்டாள் ராகேல்.

பார்த்தீர்களா! நன்கு பொறுமையோடு, கவனத்தோடு வேதாகமத்தை படிப்பது நல்லது. யாக்கோபு கூறியது போல் கர்த்தரின் அருள் இல்லாவிட்டால் சந்தானம் கிடைக்காது. ஏனென்றால் கர்ப்பத்தின் கனி கர்த்தரால் கிடைக்கும் பலன்.

உலகத்திலே விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் அதிகம் வளர்ந்து விட்டது. உலகப் போர் திரும்பவும் வந்தால் எப்படி சமாளிக்க வேண்டும், திறமையாக (Diplomatic) எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கான அணு ஆயுதங்கள் எல்லாவற்றையும் மனிதன் செய்து வைத்திருக்கிறான். ஆனால், கர்ப்பத்தில் கனியை உருவாக்குவது மட்டும் தேவன் ஒருவரால் மட்டுமே முடியும். இந்தக் காரியத்தை மட்டும் மனிதன் தன் அறிவினால் உருவாக்க முடியவே முடியாது. ஆகவே, தேவனால் கொடுக்கப்படும் சந்தானத்தை நாம் இரு கரங்கள் கொண்டு, பெற்றுக்கொண்டு வாழ்நாள் உள்ளவரைக்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

வேதாகமத்திலே சந்தானம் இல்லாதவர்கள் தேவனிடம் எப்படியெல்லாம் போராடினார்கள், எப்படியெல்லாம் ஜெபித்தார்கள், தேவன் அவர்களுடைய சத்தத்தையும், விண்ணப்பத்தையும் கேட்டாரா? என்ன பதில் கூறினார்? சந்தானத்தைக் குறித்து எந்த இடத்தில் போய் கர்த்தரிடம் / கர்த்தரோடு பேசினார்கள் என்று விவிலியத்திலிருந்து சிலரைக் குறித்துக் காண்போம்.

1. ஆபிரகாம் சாராளின் சந்தானம்
2. எல்க்கானா அன்னாளின் சந்தானம்
3. போவாஸ் ரூத்தின் சந்தானம்

மேலே உள்ள மூன்று தலைப்புகளில் உள்ளவர்கள் மூன்று விதமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். முதல் தலைப்பில் உள்ள இரண்டு பேரும் இஸ்ரவேலர். ஊர் என்னும் பட்டணம் மெசெப்பதோமியாவில் உள்ளது. தேராகு மூலமாக ஊர் என்னும் பட்டணத்தை விட்டு ஆரான் என்னும் இருப்பிடத்திற்கு வந்தவர்கள் ஆபிரகாம், சாராய், லோத்து, நாகோர், மில்க்காள், அவள் சகோதரி இல்காள் என்பவர்கள். இரண்டாவது தலைப்பில் உள்ளவர்களும் இஸ்ரவேலர்தான். மூன்றாவது தலைப்பில் உள்ளவர்கள் இஸ்ரவேல் மனிதனும் மோவாப் ஸ்திரீயும். இந்த மூன்று கணவன், மனைவிகளுக்கு எப்படி தேவன் சந்தானத்தைக் கொடுத்தார் என்பதை விரிவாகக் காணலாம்.

## 1. ஆபிரகாம் சாராளின் சந்தானம்

**...கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே! தேவரீர் எனக்குப் புத்திர சந்தானம் அருளவில்லை... (ஆதி 15 : 2,3).**

ஆபிரகாமை அழைத்த போது அவருக்கு எழுப்பத்தைந்து வயது. அநேக வாக்குத் தத்தங்களை தேவன் கொடுத்தார்.

Fear not Abram; I am thy shield and thy exceeding great reward (Gen. 15 : 1).

பயப்படாதே, திகையாதே என்று அநேக வார்த்தைகளால் ஆபிரகாமின் உள்ளத்தை தைரியப்படுத்துகிறார் தேவன். ஆபிரகாமின் விசுவாசத்தை அகல, ஆழ, உயரமாய் பண்படுத்துகிறார். ஆண்டவர் பேசின எல்லா வார்த்தைகளும் ஆபிரகாமுக்கு நல்லதாகவே இருந்தன. ஆனால் பெரிய ஜமீனாகவும், மிகுந்த ஐசுவரியவானுமாயிருந்த ஆபிரகாம் உள்ளத்திலோ மகிழ்ச்சி, சந்தோஷம், ஆனந்தம் எதுவும் இல்லாமல் இருந்தது. அதற்குக் காரணம் தன்னுடைய பெயரைச் சொல்லுவதற்கு அரண்மனைபோல் இருக்கும் தனது வீட்டிலே உரிமை கொண்டாடி ஓடி, ஆடி விளையாடுவதற்கு தனக்கு ஒரு புத்திரன் இல்லையே, இத்தனை சொத்துக்களையும் ஆளுகை செய்வதற்கு ஒரு மகன் இல்லையே. ஆரோகண சங்கீதத்திலே (சங். 128 : 6) வரும் வாக்குத்தத்தத்தை நான் எப்போது காண்பேன்.

**நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் காண்பாய்** என்று மனதில் ஒரே வேதனையாக சாப்பிடும்போது, தூங்கும் போது, அமரும் போது, தேவனோடு பேசும் போது இதே நினைவாகவே இருந்தார் ஆபிரகாம். ஆபிரகாமின் உள்ளத்தின் நினைவுகளையும் கர்த்தர் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

## சாராய் பெயர் மாற்றம் பெற்றது

**...கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும் (ஆதி.17 : 15).**

சாராள் என்றாள் இளவரசி மற்றும் உலகத்தின் அரசி என்று பொருள்படும். தேவனால் விவிலியத்திலே பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஒரே பெண் சாராள். தேவனால் சொல்லப்பட்ட வாக்குறுதியை நம்பி, பல ஆண்டுகளாகக் காத்திருந்து விசுவாசத்தில் சிலசமயம் தடுமாற்றம் வந்தாலும், சோர்ந்து போகாமல் உறுதியுடன் பற்றிக் கொண்ட சாராள், நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டு. விசுவாச மாவீரர்களின் பட்டியலில் (எபி. 11 : 11) இடம் பெற்றுள்ள முதல் பெண் சாராள். தன் கணவனான ஆபிரகாமை மிகுந்த மரியாதையுடன் நடத்தினாள். 1 பேதுரு 3 : 6-இல் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லுவதைப் பாருங்கள்.

Sarah obeyed Abraham calling him Lord (1 Peter 3 : 6).

**ஆபிராம் பெயர் மாற்றம் பெற்றது**

**கர்த்தர் ஆபிராமை நோக்கி : இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால் உன் பேர் ஆபிரகாம் என்னப்படும் (ஆதி 17 : 5) என்றார்.**

தேவன் முதன் முதலில் பெயர் மாற்றம் செய்தது ஆபிராம் – ஆபிரகாம் இவரைத்தான். தன் மனைவியான சாராளைக் குறித்து சொல்லப்பட்ட வாக்குறுதியை எந்த ஒரு தடுமாற்றமும் இல்லாமல் இறுக்கமாகப் பற்றி விசுவாசித்தவர். ஆனால், ஆபிரகாம் நகைத்ததைத் தேவன் கண்டார். அப்பொழுது தேவன் : உன் மனைவியாகிய சாராள் **நிச்சயமாய் ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக என்றார்.**

ஆபிரகாமுக்கு 86 வயதான போது இஸ்மவேல் (ஆகார் மூலம்) பிறந்தான். இப்போது ஆபிரகாமுக்கு நூறு வயது. சாராளுக்கு தொண்ணூறு வயது. இஸ்மவேலுக்கு 14 வயதாயிருக்கும் சமயத்தில் தேவனின் வாக்குத்தத்தம் நிறைவேறியது.

**ஆபிரகாம், சாராளுக்கு தேவன் தந்த சந்தானம் :**

கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள் பேரில் கடாட்சமானார். ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி தேவன் குறித்திருந்த காலத்திலே ஒரு குமாரனைப் பெற்றாள். சாராள் பெற்ற குமாரனுக்கு **ஈசாக்கு என்று ஆபிரகாம் பேரிட்டான் (ஆதி 21 : 1–3).**

இயேசுவின் தாயாகிய மரியாளிடம் காபிரியேல் தூதன் வந்து என்ன கூறினான்?

**இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக (லூக் 1 : 31).**

கர்த்தருடைய தூதன் சகரியாவிடம் என்ன கூறினான். இதோ உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். **அவருக்கு யோவான் என்று பேரிடுவாயாக** (லூக் 1 : 13).

பெற்றோர்களுக்கு சந்தானம் பிறப்பதற்கு முன்பே வேதத்தில் ஏழு பேருக்கு (குழந்தைகளுக்கு) கர்த்தரால் பெயர் சூட்டப்பட்டது. இஸ்மவேல், ஈசாக்கு, சாலொமோன், யோசியா, கோரேஸ், யோவான் ஸ்நானன், இயேசு கிறிஸ்து என்பவர்கள்.

பார்த்தீர்களா! சகரியாவுக்கும், எலிசபெத்துக்கும் முதிர்வயதாயிருக்கையில் சந்தானம் கிடைத்தது.

ஆகவே, வாக்கு மாறாத தேவன் சொன்னது சொன்னதுதான். காரணம் – தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக். 1 : 37). மனுஷரால் கூடாதது தேவனாலே எல்லாம் கூடும் (மத். 19 : 26).

திருமணம் ஆனவுடன் குடும்பத்தாரால் மிகவும் எதிர்பார்க்கப்படுவது குழந்தை பாக்கியத்தைப் பற்றிதான். எதை வேண்டுமானாலும் நாம் விலை கொடுத்து வாங்கி விடலாம். ஆனால், சந்தானம் மட்டும் கர்த்தரின் அருளால் கிடைக்கும் குடும்ப சந்தோஷம்.

**எல்க்கானா, அன்னாளின் சந்தானம் :**

ஏலி, எல்க்கானாவையும், அவன் மனைவி அன்னாளையும் ஆசீர்வதித்து, இந்த ஸ்திரீ கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுத்ததற்குப் பதிலாகக் கர்த்தர் உனக்கு அவனாலே சந்தானம் கட்டளையிடுவாராக என்றான்.

தேவாதி தேவனை வேதாகமத்திலே துதித்துப் பாடியவர்கள் / துதியினால் போற்றினவர்கள் அநேகர் இருக்கிறார்கள். எல்லோருடைய துதித்தலும் பத்து வசனங்களில் அடங்கின முத்தான பாக்கிய வசனங்கள். யாராலேயும் துதிக்க முடியாத வார்த்தைகள்.

**பழைய ஏற்பாட்டில் தேவனைத் துதித்துப் பாடின பாடல்**

1. இஸ்ரவேலர் மற்றும் மோசேயால் துதித்துப் பாடின பாடல் யாத். 15 : 1- 19.

2. குட்டி சாமுவேலை சீலோவிலுள்ள ஆலயத்தில் ஏலியிடம் விட்டு விட்டு, அன்னாள் கர்த்தருக்கு நன்றி சொல்லி துதித்த பாக்கிய வசனங்கள் (1 சாமு 2 : 1-10).

3. அரசர்கள், தீர்க்கன்களால் துதிக்கப்பட்ட சங்கீதப் பாடல்கள் 150.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவரைத் துதியால் துதித்தவர்கள்.

1. ஆசாரியனான சகரியா : லூக். 1 : 68-79

2. இயேசுவின் தாயான மரியாள் : லூக். 1:46-56

3. சிமியோனின் துதித்தல் : லூக் 2 : 25-35

4. தூதர் பாடல் மற்றும் மேய்ப்பர்களின் சாட்சி : லூக். 2 : 9 - 19.

தேவாதி தேவனை, கர்த்தாதி கர்த்தரை பாடல்களால் துதித்து, பலவிதமான இசைக் கருவிகளால் மீட்டு கர்த்தருடைய இருதயத்தில் நீங்கா இடம் பெற்ற ஒரே மனிதர் தாவீது ராஜா. துதித்தல் மனிதனான நமக்கு முக்கிய கடமையாகும்.

எல்க்கானாவிற்கு பெனின்னாள், அன்னாள் என்று இரண்டு மனைவிகள். இதில் அன்னாளுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. ஒரு சமயம் சீலோவிலிருக்கிற ஆலயத்திற்குச் செல்கிறாள் அன்னாள். காரணம், அன்னாள் மனம், நோகும்படி பெனின்னாள் ஏதாவது பேசிக் கொண்டேயிருந்தாள். எப்படியென்றால் ஆகார் கர்ப்பவதியான போது சாராளை மனம் நோகுமாறு பேசினாள். இதனால் வருத்தப்பட்ட அன்னாள், தன்னுடைய சிக்கலைத் தீர்ப்பதற்கு எந்த மனிதனாலும் முடியாது. ஆனால், தேவனால் எல்லாம் முடியும் என்ற விசுவாசத்தோடு அன்னாள் தேவனை நாடினாள். ஆண்டவரோடு ஒரு பொருத்தனை பண்ணினாள்.

சேனைகளின் கர்த்தாவே, **...உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால்.... நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன் என்று ஜெபித்தாள் (I சாமு I : II).** கர்த்தர் நிச்சயமாய் பதிலளிப்பார் என்று அன்னாள் விசுவாசித்தாள். கர்த்தர் அன்னாளின் கர்ப்பத்தைத் தற்காலிகமாக அடைத்திருந்தார். அன்னாளுக்கும் இஸ்ரவேலுக்கும் பெரிய ஆசீர்வாதத்தையும், தமக்கு மகிமையையும் கர்த்தர் ஆயத்தம் பண்ணி வைத்திருந்தார். இதை அன்னாள் அறியாமல் வேதனைப்பட்டாள்.

ஒரு விஷயத்தை மட்டும் நம் வாழ்க்கையில் கடைபிடிக்க மறக்கக் கூடாது. மனவேதனையுடன் இருப்பவர் யாராயினும் அவர்களைத் தேற்றுவது நமது கடமை. நம்மை வெறுக்கிறவர்களாயினும் அவர்களின் துக்க நேரத்தில் ஆறுதலாகப் பேச வேண்டும். அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

அன்னாளின் கர்ப்பத்தின் அடைப்பை நீக்கினார் கர்த்தர். அருமையான ஒரு தீர்க்கனையே பாலகனாகத் தந்தார். குழந்தையை ஆலயத்திலே ஆண்டவருக்கென்று கொண்டு வந்து விடும் சமயம் /நேரம் வந்தது.

**பொருத்தனையை நிறைவேற்றிய அன்னாள் :**

அன்னாள் ஏலியைப் பார்த்து : **...என் ஆண்டவனே, இங்கே உம்மிடத்திலே நின்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணின ஸ்திரீ நான்தான் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியால்.... அவனைக் கர்த்தருக்கே ஒப்புக் கொடுக்கிறேன் என்றாள் (I சாமு I : 26,28).**

அன்னாள் தான் மிகவும் விரும்பிக் கேட்டுப் பெற்றுக் கொண்ட ஆண் மகனை தன்னுடைய

பொருத்தனையின்படி கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வந்துவிட்டாள். குழந்தையைப் பிரிவது அன்னாளுக்கு வேதனையாயிருந்த போதிலும் பொருத்தனையை நிறைவேற்றினாள். தனக்கு அருமையானதைக் கர்த்தருக்குக் கொடுத்தாள். அன்னாளைப் போல் நாம் நமக்கு விருப்பமானதைக் கர்த்தருக்கு கொடுக்கிறோமா? அல்லது கொடுக்க வேண்டுமே என்று எதையாவது கொடுக்கிறோமா?!

கர்த்தர் தரும் நல்ல ஈவுகளுக்காக அன்னாள் உளமாரத் துதித்தாள். மரியாளின் துதித்தலும், அன்னாளின் துதித்தலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகக் காணப்படும். துதித்தல், நன்றி படைத்தல், வாழ்க்கையில் முக்கியமானது.

சாமுவேல் ஆண்டவருக்கென்று சணல் நூல் ஏபோத்தைத் தரித்தவனாய் பணிவிடை செய்தான். வருஷந்தோறும் பலி செலுத்த வரும்போதெல்லாம் ஒரு சின்ன சட்டையை தைத்துக் கொண்டு வருவாள் அன்னாள். குழந்தை சாமுவேலையும், ஏலியையும் பார்த்துவிட்டுப் போவாள். ஆலயத்தில் மறக்காமல் ஜெபம் செய்து விட்டுத்தான் திரும்புவாள். அப்படி ஒருசமயம் சீலோவிலுள்ள ஆலயத்தில் ஜெபம் செய்து விட்டு போகும் சமயத்தில் தான், ஏலி இரண்டுபேரையும் (எல்க்கானா, அன்னாள்) ஆசீர்வதித்துச் சொன்ன வார்த்தைதான் கர்த்தர் உனக்கு அவளாலே சந்தானம் கட்டளையிடுவாராக என்று.

அன்னாள், கர்த்தரையும் அவருக்கு ஊழியம் செய்யும் தன் மகனையும் மறக்கவில்லை. கர்த்தர் அன்னாளை மறப்பாரோ? அன்னாள் கர்த்தருக் கென்று செய்த செயலுக்கு கர்த்தர் பலனளித்தார்.

அப்படியே கர்த்தர் அன்னாளைக் கடாட்சித்தார். அன்னாள் கர்ப்பந்தரித்து மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள்.

Hannah bare three sons and two daughters.

கர்த்தரை நேசித்து அவருக்குக் கொடுப்பவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பது நிச்சயம்.

**3. போவாஸ் ரூத்தின் சந்தானம் :**

இந்தப் பெண்ணிடத்திலே கர்த்தர் உனக்கு அருளிச் செய்யப் போகிற சந்தானத்திலே உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக (ரூத். 4 : 11).

ஆபிரகாம் துவங்கி போவாஸ் வரை பார்த்தால் போவாஸ் பன்னிரண்டாவது தலைமுறையில் பிறந்தவர். இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியானவர். மிகச் சிறிய புத்தகம் ரூத். நான்கு அதிகாரங்களைக் கொண்ட சிறிய நூல். கண்ணீர், கடமை, காத்திருத்தல், திருமணம் என்று நான்கு பிரிவுகளைக் கொண்டது.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? மாமியாருக்கும் (நகோமி) மருமகளுக்கும் (ரூத்) இணைப்பை உருவாக்க எந்த ஒரு மழலைச் செல்வமும் இல்லாத வீட்டில் ஒருவரை ஒருவர் நேசித்த உன்னத உறவு ரூத் புத்தகம். கண்டிப்பாக எல்லா வாலிப பெண்களும் படிக்க வேண்டிய உன்னதமான நூல். இந்த நூலில் இடம் பெற்றவர்கள் மூன்றே நபர். ரூத், நகோமி, போவாஸ். இடம் என்று எடுத்துப் பார்த்தால் இரண்டே இடம் மோவாப், பெத்லெகேம்.

**நகோமி யார் :** பெத்லெகேம் ஊரில் வாழ்ந்த ஒரு குடும்பம். எலிமெலேக், மனைவி நகோமி, பிள்ளைகள் மக்லோன், கிலியோன்.

நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்த சமயத்தில் பெத்லெகேம் ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தால் அப்பத்தின் வீட்டைவிட்டு அருகிலிருந்த தேவனை அறியாத தேசமான மோவாப் என்ற இடத்திற்கு குடும்பமாக இடம் பெயர்ந்து போனார்கள்.

**<u>மோவாப் பெயர் காரணம் :</u>** லோத்துக்கு இரண்டு குமாரத்திகள். தகப்பன் மூலமாக இரண்டு குமாரத்திகளும் மகன்களைப் பெற்றனர். மூத்தவள் பெற்ற மகனுக்கு **மோவாபியரும்** என்று பெயர். இளையவள் பெற்ற மகனுக்கு **பென்னம்மி** என்று பெயர். மோவாபியர் மற்றும் அம்மோனியருக்கு தகப்பனானார்கள். மோவாபியரும், அம்மோனியரும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது. பத்தாம் தலைமுறையிலும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது (உபா. 23 : 3).

**<u>இதற்கு ஒரு விதிவிலக்கு மோவாபியப் பெண்ணான ரூத்.</u>**

தேவனை நன்கு அறிந்த ஒரு குடும்பம் மோவாப் தேசத்திற்குச் சென்றது, ஆண்டவருக்கு மிகுந்த மன சங்கடத்தைத் தந்தது. அப்பத்தின் வீடாகிய தம்முடைய இருப்பிடத்தைவிட்டு இந்த இடத்திற்கு வந்ததுமல்லாமல், எலிமெலேக்கும் நகோமியும் தங்களுடைய இரண்டு மகன்களுக்கும் பெண் கொண்டது, தேவனுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. வீட்டில் உள்ள மூன்று பெண்களும் கைப்பெண்ணாயினர். எலிமெலேக், மக்லோன், கிலியோன் மூன்று ஆண்களும் மரித்துப் போயினர்.

**<u>நகோமி, ரூத் பெத்லெகேம் திரும்புதல் :</u>**

**நான் நிறைவுள்ளவாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பி வரப்பண்ணினார்... (ரூத். 1 : 21).**

பெத்லெகேமை விட்டு மோவாப் தேசத்திற்குப் போகும்போது நான்கு பேராகச் சென்ற நகோமிக்கு மோவாப் தேசத்திற்குச் சென்று, ஆறுபேராக குடும்பம் விருத்தியடைந்தது போல் ஒரு மாயத்தோற்றம் உண்டானது. கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று நகோமி கேள்விப்பட்டு பெத்லெகேம் தேசத்திற்கு திரும்பி வரும்படி எழுந்தாள். கர்த்தர் நகோமியைத் தனியாக அனுப்பாமல் நகோமிக்குத் துணையாக மக்லோனின் மனைவியான ரூத் என்ற மோவாபிய மருமகளைக் கூட அனுப்பினார். நகோமியும், ரூத்தும் பெத்லெகேமுக்குத் திரும்பினார்கள்.

**<u>போவாஸின் உள்ளமும், பார்வையும் :</u>**

**பார்வை : இந்தப் பெண் பிள்ளை யாருடையவள்... (ரூத் 2 :5).**

உள்ளம் : அப்பொழுது போவாஸ் ரூத்தைப் பார்த்து : **மகளே, கேள், பொறுக்கிக் கொள்ள வேறே வயலில் போகாமலும் ...இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இரு (ரூத். 2 : 8).**

போவாஸ் என்றால் செல்வந்தர் என்று அர்த்தம். எளியவர்களுக்கு உதவும் தாராள குணம் கொண்டவர்.

அவள் பொறுக்கி கொள்ளும்படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்த விடுங்கள். அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான். குடும்பத்தின் நலனுக்காக எளிய வேலை செய்யவும் ரூத் தயங்கவில்லை. ஆறுபடி வாற்கோதுமையை போர்வையில் அளந்து போட்டு அவள் மேல் தூக்கி விட்டு உன் மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போக வேண்டாம் என்று போவாஸ் ரூத்திடம் கூறினான்.

**<u>மாமியாரின் உள்ளமும், பாதுகாப்பும்</u>**

மனுஷியான தன்னை நம்பி வந்த தன் மருமகளின் அன்பானது நகோமியின் உள்ளத்தில் ஆழப்பதிந்தது. அவள் தன் மருமகளை, மகளே! என்று அழைத்துப் பேசுகிறாள். மருமகள் மகளாக முடியாது என்றும் மாமியார் அம்மாவாக முடியாது என்பது உலக வழக்கு. இந்த எண்ணத்தை மாற்ற வந்தவர்கள்தான் நகோமியும், ரூத்தும்.

நகோமி கூறினாள் : மகளே! நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத்

தேடாதிருப்பேனோ? நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு போவாஸ் தங்கியிருக்கும் களத்திற்குப்போ என்றாள் நகோமி.

நகோமி தன் நலனை விட ரூத்தின் நலனைக் கருதி போவாஸை சந்திக்கும்படி ரூத்திடம் கூறினாள். கீழ்ப்படிதலில் சிறந்த ரூத், உடனடியாக மாமியாரின் சொற்படி செய்தாள். போவாஸின் நற்குணத்தை நகோமி அறிந்திருந்ததால் ரூத்தை அனுப்பினாள். தவறான நோக்கத்தோடு அனுப்பவில்லை.

**தேவனை அறிந்த மோவாபியப் பெண் :**

**...உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் (ரூத் 1 : 16).**

ஏழு அர்ப்பணிப்புகளை ரூத் தன் மாமியாராகிய நகோமியிடம் வைத்தாள். கடைசி அர்ப்பணிப்பாக மரணம் ஒன்றைத்தவிர வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரிக்க முடியாது என்று ஒரு மருமகள் கூறுகிறாளென்றால் தேவன் மீது கொண்ட பற்று, மற்றும் தனக்கென்று தன்னையே அர்ப்பணித்து வாழும் தன்னுடைய வயதான மாமியாரின் உள்ளம். தன்னை பாதுகாப்பாக நடத்தும் விதம் எல்லாமே ரூத் தன் உறவினர்களைவிட மாமியார் மீதிருந்த பந்தம் போற்றுதற்குரியது.

**தேவனிடம் அடைக்கலம் பெற்ற ரூத் :**

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்று கூறினார் போவாஸ்.

போவாஸ் ஒரு இஸ்ரவேல் பிரபு. மிகப்பெரிய ஜமீன். வயலை பராமரிக்க, அறுவடை செய்ய, கதிர்களை சேகரிக்க என்று எத்தனையோ பேர் இருந்தனர். இஸ்ரவேல் பெண்கள் எத்தனையோ பேர் போவாஸின் வயலுக்கு வந்து போயிருக்கலாம். ஆனால், தேவன் தன்னுடைய திருமணக் காரியத்தை தானே ஏற்று நடத்துவார் என்பதில் உறுதியாயிருந்தாள் ரூத்.

ஒரு மருமகளின் அன்பு ரூத்தை, எவ்விதம் ஆசீர்வதித்தது என்று சிந்திப்போம். தன்னை ஆதரிப்பதற்கு அன்புள்ளம் கொண்ட மாமியாரும் பிரபுவாயிருந்த ஒரு கணவனும் நகோமி தன் மடியிலே தூக்கி வளர்க்க ஒரு ஆண் குழந்தையும் (ஓபேத்) கிடைத்ததால் ரூத்தின் வாழ்க்கை செழிப்பானது. அவளுக்கு சந்தானம் கிடைத்தது.

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் பிரபுவாகிய போவாஸை திருமணம் செய்தபடியால் ரூத்தின் இல்லம், இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த ராகேல், லேயாள் போல வாழ்ந்திருக்க தேவன் ஓபேத் என்ற சந்தானத்தின் மூலம் இயேசுவானவர் அவள் சந்ததியில் பிறந்தார்.

**கர்த்தர் எப்போது சந்தானத்தை ஆசீர்வதிப்பார்?**

**...உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசா. 44 : 3).**

ஒரு மனிதனுக்கு சந்தானம் தேவை தான். ஆனால், கர்த்தரின் ஆசீர்வாதம் அந்த சந்தானத்தின் மேல் இருக்க வேண்டுமானால் 1) மனந்திரும்ப வேண்டும். 2) திருமுழுக்கு பெற்றுக் கொள்ள வேண்டும். 3) தூய ஆவியானவரின் வரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படி வாழும்போது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் சந்தானத்தை ஆசீர்வதிப்பார் என்பதில் சந்தேகமே வேண்டாம். ஆபிரகாம், அன்னாள், ரூத்துக்கு அருளிய சந்தானமானது நம் குடும்பத்திற்கும் கர்த்தர் நிச்சயம் தருவார்.

ஜெபிப்போம், துதிப்போம், நன்றி செலுத்துவோம், ஆசீர் பெறுவோம்!

**– திருமதி. பேர்ல் குயின்ராஜா**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்களது அன்பின் வாழ்த்துதலையும், புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த வருடத்திலிருந்த எத்தனையோ பேர் இந்த ஆண்டிற்குள் பிரவேசிக்கவில்லை. கடந்த வருடம் முழுவதும் நம்மை எல்லாவிதமான தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாத்த தேவனுக்கு கோடானகோடியான ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போமாக. இந்த புதிய வருடத்தில் நாம் தீர்மானித்த புதிய தீர்மானங்களை கடைசி வரைக்கும் கடைபிடிக்க கர்த்தர் தாமே உதவி செய்வாராக.

**அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி. 22 : 11).**

கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த புதிய ஆண்டில் நம்முடைய ஜெப நேரங்களும், வேத வாசிப்பும், பரிசுத்தமும் அதிகமாயிருக்க பரிசுத்த ஆவியானவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

உலகத்தில் வாழ்கிற ஒவ்வொரு மனிதனும் நல்லதோ, கெட்டதோ எந்த ஒரு காரியத்தையும் மேலும் மேலும் செய்து கொண்டேயிருக்கும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது ஒரு மனிதன் பாவத்தில் பெருகிக் கொண்டேயிருப்பான் அல்லது பரிசுத்த வாழ்வில் நாட்டம் கொண்டு தேவ பக்தியில் பெருகிக் கொண்டேயிருப்பான். வெளி 2 : 4-ல் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு என்று கர்த்தர் சொல்கிறார்.

ஏன் கர்த்தர் பேரில் கொண்ட அன்பு, கடைசி நாட்களில் தணிந்து போகிறது? உலகத்தின் முடிவிற்கும் உம்முடைய வருகைக்கும் அடையாளமென்ன? என்று சீஷர்கள் கேட்ட பொழுது, இயேசு **“அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்” (மத். 24 : 12)** என்று கூறினார். கர்த்தருடைய வருகையின் நாட்கள் நெருங்கும் பொழுது அக்கிரமம் அதிகமாகும். பிசாசு தனக்கு கொஞ்ச நாட்களே இருக்கிறது என்பதையறிந்து ஜனங்களை துணிகரமான பாவத்தைச் செய்யும்படியாகவும், உலக பிரகாரமான ஆசைகளைத் தூண்டி கர்த்தருடைய கட்டளைகளை மீறும்படியாகவும் மோசம் போக்குகிறான். சோம்பலும், நிர்விசாரத்தின் ஆவிகளும், பிசாசின் தந்திரமான கிரியைகளும் அநேகரை அடிமைப்படுத்தி கர்த்தரிடத்தில் அன்பு கூறாதபடி நம்மை அவரிடத்திலிருந்து பிரிக்கிறது. 2 யோவான் 1 : 6-ல் நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு என்று வாசிக்கிறோம்.

கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்பொழுது, உன்னை தமக்கு பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார் என்று வாசிக்கிறோம். நாம் அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, பரிசுத்தராய் வாழ வேண்டும் என்பதே அவருடைய விருப்பம்.

**நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (1 பேதுரு 1 : 16).**

கடந்த நவம்பர் மாதம் 17-ஆம் தேதியிலிருந்து 27-ஆம் தேதி வரை கோவை, IBT மையத்தில் ஒடிஷாவிலிருந்து மிர்கான் மொழிபெயர்ப்பாளர் சகோ. கேசப் மிர்கான், கலகாண்டியா மொழி பெயர்ப்பாளர் சகோ. பீதாம்பர் மகனந், தெஷியா மொழிபெயர்ப்பாளர் சகோ. கிறிஸ்துதான் மற்றும் உத்தரப்பிரதேசத்திலிருந்து போஜ்புரி மொழி பெயர்ப்பாளர் சகோ. சுதிர்குமார் ஆகியோர் தங்கள் பழைய ஏற்பாடு புத்தகத்தின் மொழிபெயர்ப்புச் செய்த பணிகளை சரிபார்ப்புச் செய்தார்கள். பெங்களூர் BSI-லிருந்து Rev. Dr. சுப்ரமணி அவர்கள் Zoom Meeting மூலமாக நான்கு மொழிபெயர்ப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு, இவர்களின் பணிகளைக் கேட்டு, நல்ல ஆலோசனைகளைக் கொடுத்தார். டிசம்பர் மாதம் 11-ஆம் தேதியன்று கோவை, நீலாம்பூரிலுள்ள “SARAL” De Addiction Centre-க்கு IBT கோவை பிரதிநிதிகள் சென்று அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்திகளைக் கூறி, மதிய உணவு IBT-ன் சார்பாக கொடுக்கப்பட்டது. இம்மாதம் 10-ஆம் தேதியன்று IBT-இன் 2026-

க்குறிய முதல் திட்டக்கூடுகை கோவை IBT மையத்தில் நடைபெற உள்ளது. இதில் பிரதிநிதிகள் அனைவரும் பங்கு பெறவும், நல்ல ஆலோசனைகள் பகிர்ந்து கொள்ளப்படவும், பிரதிநிதிகள் இல்லாத இடங்களுக்கு புதிய பிரதிநிதிகள் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

இந்த 2026-ஆம் புதிய ஆண்டில் கடந்த வருடங்களில் தடைபட்டு, நடக்காத காரியங்கள் இவ்வருடத்தில் நடக்கவும், உங்கள் வேண்டுதல்களை கர்த்தர் நிறைவேற்றி, ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க ஜெபிக்கிறோம்.

கர்த்தருக்குள் உங்கள் சகோதரர்
**K. ஜெய்சிங்**

## எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.**

## உலகச் செய்திகள்

★ காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள தாமிரச் சுரங்கத்தில் பாலம் இடிந்து விழுந்து 32 பேர் உயிரிழந்தனர். அந்த நாட்டின் தெற்கு மகாணமான லுவாலபாவில் உள்ள கலாண்டோ சுரங்கத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

★ ரஷியாவுடன் வர்த்தகம் செய்யும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் இறக்குமதி பொருள்களுக்கு கூடுதலாக 500 சதவீத வரி விதிக்கப் போவதாக டிரம்ப் எச்சரித்துள்ளார்.

★ வங்கதேசத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியா 3 தங்கம், 2 வெள்ளி பதக்கங்களை வென்றது.

★ உலகக் கோப்பை குத்துச் சண்டை இறுதிப் போட்டியில் 9 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலம் என 20 பதக்கங்கள் வென்று வரலாறு படைத்தது இந்தியா.

இந்தியாவில் செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவின் மைக்ரோசாப்ட் நிறுவனம் ரூ. 1.58 லட்சம் கோடி முதலீடு செய்ய முடிவு செய்துள்ளதாக அந்த நிறுவனத் தலைமை செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா அறிவித்துள்ளார்.

*தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூறு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் (யோவேல் 2 : 21).*

**இந்திய வேதாகம ஊழியங்களுக்காகவும், இந்திய தேசத்தின் மறுமலர்ச்சிக்காகவும்**
**இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்**
**நடத்தும்**

# 12 மணி நேர ஜெபக்கூடுகை

**நாள் : 26.01.2026 – நேரம் : காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**
**தேவ செய்தி : IBT செய்தியாளர்கள்**

மிஷனெரி சாட்சிகள்! உற்சாகமூட்டும் பாடல்கள்!! ஊழியத்திற்காகவும், தேசத்திற்காகவும் மன்றாட்டு ஜெபங்கள்!!!

தேநீர் – மதிய உணவு வழங்கப்படும்.

*ஜெபத்துடன் உற்சாகமாய்ப் பங்கு பெறுங்கள், ஆசீர்வாதம் அடையுங்கள்.*

தொடர்புக்கு : IBT **மொபைல் : 90470 57414, சகோ.ஜாய்குட்டி, 99431 82098**

# பணித்தளச் செய்திகள்

<u>மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :</u>
<u>சகோ. சோபத்ராம் டோப்போ</u>
<u>மொழி : குருக்</u>
<u>பணித்தளம் : லைலுங்கா (சட்டிஷ்கார்)</u>

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் கொலோசேயர், I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர், I தீமோத்தேயு, II தீமோத்தேயு, தீத்து, எபிரேயர், யாக்கோபு, I பேதுரு, II பேதுரு, I யோவான், II யோவான், III யோவான், யூதா. வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்களில் Paragaraphs, Cross references, Foot Notes ஆகியன செய்யப்பட்டன.

மேலே குறிக்கப்பட்ட புத்தகங்கள் Paratext Software-இல் போடப்பட்டு வருகின்றன. புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் ஆகிய மூன்றும் சேர்ந்த புத்தகமாக அடுத்த லோகோஸ் முகாமில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன. மிஷனெரிப் பணியில் வீட்டு ஜெபக்கூட்டம் கெடாமா என்ற கிராமத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நடத்தப்பட்டது. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

-------------------

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. கிதியோன்</u>
<u>பணித்தளம் : கோயமுத்தூர் (தமிழ்நாடு)</u>

கர்த்தரின் பெரிதான கிருபையினால் அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை சிவகாசிக்குச் சென்று பிரதிநிதி-களுக்கும், முன்னேற்றப் பணியாளர்களுக்கும், காலண்டர்களைப் பார்சல் செய்து அனுப்ப கர்த்தர் கிருபை செய்தார். போத்தனூரிலுள்ள Vision Church of God சபையில் அக்டோபர் 12-ஆம் தேதி காலை ஆராதனையில் IBT சார்பாக தேவ செய்தியளிக்கவும், IBT ஊழிய விளக்கம் கொடுக்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது. சகோ. ராஜகுமார் தேவ செய்தியைக் கொடுத்தார். நான் IBT ஊழிய விளக்கத்தைக் கொடுத்தேன். இதற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். மேலும் CSI, TELC மற்றும் இதர சபைகளிலும் IBT முன்னேற்றக் கூட்டம் நடத்த வாய்ப்பு கேட்டு வருகிறேன். வாய்ப்புகள் கிடைப்பதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். முன்னேற்றப் பணிக்காக காருண்யா, கவுண்டம்பாளையம், போத்தனூர், ரத்தினபுரி, காந்திபுரம், ராஜ வீதி, சிங்காநல்லூர், ராமநாதபுரம், துடியலூர், பீளமேடு, கணபதி, சாய்பாபா காலனி, சித்ரா, பேரூர் ஆகிய இடங்களிலுள்ள IBT பாங்காளர்கள், தாங்குநர்கள் வீடுகளுக்குச் சென்று, காணிக்கைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். தவிர அலுவலகப் பணிக்காக IBT அலுவலகம் சென்று பத்திரிகைகளை போஸ்ட் செய்தேன்.

என் முன்னேற்றப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

-------------------

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோதரி. பூங்கிளி டேவிட்ராஜ்</u>
<u>மொழி : தோடா</u>
<u>பணித்தளம் : கிரீன்லேண்ட், ஊட்டி (தமிழ்நாடு)</u>

கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! கடந்த மாதம் ஊழியத்தையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றியைக் கூறுகிறேன்.

மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகம் யாத்திராகமம் புத்தகத்தில் அதிகாரம் 20:11-ஆம் வசனம் முதல் அதிகாரம் 30:38-ஆம் வசனம் வரையிலும் மறுசரிபார்ப்பு செய்து, கணினியில் கீ-இன் செய்தேன். என்

பணித்தளமாகிய கிளன்மார்கன் பணித்தளத்திலுள்ள திருச்சபையில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆராதனை நடைபெற்று வருகிறது. எனது கணவர் திரு. டேவிட்ராஜ் அவர்கள் ஆராதனையை நடத்தி வருகிறார். 135 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட, பழுதடைந்த இந்த ஆலயத்தை, தேவனுடைய கிருபையால் மீண்டும் கோயமுத்தூர் CSI Dicocese மூலமாக DBM பணித்தளமாக மாறியுள்ளது. எங்கள் தோடா சமுதாயத்திற்காக செய்யப்படுகிற ஊழியம், இங்கு நடக்கும் ஆராதனைகளில் எங்கள் மொழியில் வேதாகமத்தை வாசித்து, பாடல்கள் பாடி தேவ நாமத்தை மகிமைப்படுத்தி வருகிறோம். ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் இந்தப் பணித்தளத்தில் உபவாசக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் பெண்கள் மட்டும் கலந்து கொள்கிறார்கள். IBT மூலமாக தோடா மொழியில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் (புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள்) விநியோகம் செய்வதற்கு தடைகள் இருப்பதால், கொடுக்க முடியாமல் உள்ளது. புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் அடங்கிய ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Device) பலராலும் விருப்பமுள்ளதாக உள்ளது. ஆகவே இக்கருவிகள் அதிகமாக வாங்கி, இம்மொழி பேசும் மக்களுக்குக் கொடுக்கப்படும்படியாக தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

---

<u>மிஷனெரி : சகோ. ரூபன் மிர்கான்</u>

<u>பணித்தளம் : எய்ன்லி (ஒடிஷா)</u>

இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் வாழ்த்துக்கள்!

தினமும் மாலை வேளை ஜெபமும், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் Zoom Prayer Meeting-இல் கலந்து கொள்கிறேன்.

மிஷனெரிப் பணிக்காக பகனகுடா, ஒல்மா, குமுடா, செம்லா, கபுர்மால், பண்டிரிபாக்கன், சுனடெங்கிரிகுடா, ரெங்கல்பாரி ஆகிய கிராமங்களுக்குச் சென்று, பலரைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். சகோ. ஜிசைநாக், சுரேஷ், சத்திரியா, பெலர்சன், ஹரிஜன், ரமேணூரி ஹரிஜன், லிப்ராஜ் நாய்க், ஜகேஷ் சுனா, ருபேஸ் மிர்கான் மற்றும் சான்சிங்சுனா ஆகியோர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள். இவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபித்தேன்.

சகோ. மட்டாய் மிர்கான் ரத்தக் கொதிப்பு நோயினாலும், சஞ்சு மிர்கான் மிகுந்த பலவீனத்திலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். செபதி மிர்கானுக்கும், நல்ல உடல் நலத்திற்காக ஜெபியுங்கள். என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. சந்திரகாந்தா பர்லா</u>

<u>மொழி : முண்டாரி</u>

<u>பணித்தளம் : பாலுப்பள்ளி (ஒடிஷா)</u>

கர்த்தரின் கிருபையால் என் மொழிபெயர்ப்பு மற்றும் மிஷனெரிப் பணிகளை நன்கு செய்ய முடிந்தது.

மொழிபெயர்ப்புப் பணியில் சங்கீதம் 10 : 1–இல் இருந்து சங்கீதம் 59 : 8–ஆம் வசனம் வரையிலும் சரிபார்ப்பு செய்து, சரியான அர்த்தம் தரும் வார்த்தைகளைப் போட்டு, இலக்கணம், கீழ்குறிப்பு, Cross Reference ஆகியன பார்க்கப்பட்டன. சரியான அர்த்தம் தெரியாததை போதகர்கள் மற்றும் மூத்தவர்களைச் சந்தித்து, அவர்கள் மூலமாக அறிந்து சரி செய்தேன். மேலும் கிராமத்து மக்கள் புரியும்படியாக அவர்களையும் சந்தித்து, சரியான வார்த்தைகளைப் பெற்று சரிபார்ப்புச் செய்தேன். சகோ. சந்தோஷ் முண்டா மற்றும் ஸ்மித் ஹீரா இதற்கு உதவினார்கள். ஐந்து முண்டாரி புதிய ஏற்பாடு புத்தகங்களை விநியோகம் செய்தேன்.

என் மொழிபெயர்ப்புப் பணி, மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.




# சாயர்புரத்தின் தந்தை
# ஜி.யு. போப் (கி.பி. 1820 - 1908)

**சென்ற மாத தொடர்ச்சி....**

## சாயர்புரத்தில் அருட்பணி தொடக்கம் :

சென்னையிலிருந்து போப்பும், கால்டுவெல்லும் ஒரே சமயத்தில் கிறிஸ்தவ நற்செய்தி அறிவிப்பாளர்களாக 1841-இல் திருநெல்வேலி மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டனர். இடையன்குடி என்ற சிற்றூரில் கால்டுவெல்லும், இன்றைய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாயர்புரத்திற்குப் போப்பும் அனுப்பப்பட்டனர். ஆனால் போப் உடனடியாகச் சென்று சாயர்புரத்தில் போய் சேர முடியவில்லை. ஏனெனில் அங்கு கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்டத் துன்பத்தால் ஏற்பட்ட ஒருவித பதற்றத்தின் காரணமாக 6 மாத காலம் பளையங்கோட்டையிலேயே தங்கிவிட்டார்.

கேமரர் ஐயர், நாசரேத் வட்டார எஸ்.பி.ஜி. சபைகளின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் காலத்தில் ஏராளமான இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர். இதனால் இந்துக்களிடையே பெரும் பரபரப்பும் சலசலப்பும் ஏற்பட்டன. முக்கிய இந்து பிரமுகர்கள் திருச்செந்தூரில் கூடினர். வெள்ளைப் பாதிரியார்களை முறியடிக்க விபூதிச் சங்கம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏரல் வட்டார கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள் வெறித்தனமாக தாக்கப்பட்டன. கிறிஸ்தவர்களாக மாறிய இந்துக்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர். இதைக்குறித்து டி.ஏ. கிறிஸ்துதாஸ் ஐயர் இதை ஏரல் துன்பம் என்றே குறிப்பிடுகிறார். மேற்படி கிறிஸ்துதாஸ் ஐயர், திருநெல்வேலி வெள்ளைக்கார கலெக்டரின் உதவியுடன் அக்கிளர்ச்சியை அடக்கினார். ஆனால் விபூதிச் சங்கம் பொருமிக் கொண்டிருந்தது. ஏரல் துன்பம் நீங்கியபின் 1842 மே மாதம் நாசரேத்துக்கு உட்பட்டிருந்த உபசபையான சாயர்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு தாமிரபரணி ஆற்றுக்கு வடக்கேயுள்ள ஏரல், சுப்ரமணியபுரம், செபத்தையாபுரம், புதுக்கோட்டை, புதியமுத்தூர், தூத்துக்குடி ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு அதன் முதல் குருவாக போப் நியமிக்கப்பட்டார். அப்பொழுது சாயர்புரம் வட்டம் முழுவதும் 512 கிறிஸ்தவர்களும் 5 ஊழியக்காரர்களும் இருந்தனர். ஒரு சிறு ஆலயமிருந்தது. அது பகல் நேரத்தில் ஆரம்பப் பள்ளியாகவும், இரவு நேரத்தில் ஆலயமாகவும் செயல்பட்டது. பள்ளியில் மொத்தம் 13 மாணவர்களே இருந்தனர்.

அந்நாட்களில் சாயர்புரம் பகுதி கள்ளிக்காடாகவும், சிவப்பு மண்குவியல்கள் நிறைந்த தேரியாகவும், நரிகள், பாம்புகள் மற்றும் திருடர்கள் வாழும் காடாகவும் இருந்தது. போப் அரசு அனுமதி பெற்று, காடாய் கிடந்த அந்தப் பகுதியை சுத்தப்படுத்தினார். அப்பகுதியை மக்கள் தங்கும் குடியிருப்பு பகுதிகளாக மாற்றினார். அங்கு வெட்டப்பட்ட வேம்பு, பனை மரங்களை பள்ளிக்கூடம், ஆலயம், வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

## கல்விப்பணி

போப் சாயர்புரத்து மக்களின் கல்வியறிவற்ற நிலையைக் கண்டு மிகுந்த வேதனையடைந்தார். அப்பொழுது தமிழ்நாட்டில் சென்னையிலும், தஞ்சையிலும் மட்டும் செமினெரி (கல்விக்கூடம்) இருந்தன. சாயர்புரத்தில் மிகப்பெரிய அளவில் தரம் உயர்ந்த செமினெரி ஒன்றை அமைக்கத் திட்டமிட்டார். சென்னை கிறிஸ்தவ

மேலிடத்திலிருந்து ஒப்புதலும் பெற்றார். 1844-ல் வகுப்பறைகள், மாணவர் விடுதி, சமையலறை, நோயுற்ற மாணவர்கள் தங்கும் அறை இவைகளை அமைத்து கட்டிடங்களைக் கட்டத் தொடங்கினார். சாயர்புரத்தை முதன்மை பெறச் செய்து, உலகறியச் செய்த அந்த வரலாற்று, சிறப்புமிக்க செமினெரியை 1844 அக்டோபர் 5-ஆம் நாள் சாயர்புரத்தில் நிறுவினார்.

சாயர்புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட செமினெரியின் முதல் முதல்வராக போப் பொறுப்பேற்றுக் கொண்டார். இச்செமினெரியின் குறிக்கோள் சொல்லும் (Motto) சின்னமும் (crest) போப்பால் உருவாக்கப்பட்டன. இதன் குறிக்கோள் சொல் ஆங்கிலத்தில் **"Be First, Be with the First"** **என்றும் தமிழில் முதல்வனாயிரு, முதல்வனோடிரு என்றும் தமிழாக்கம் செய்யப்பட்டது.** எல்லாவகையிலும் முதல்வனாகவும் அந்த முதல்வனாகிய கடவுளோடும் இருக்க வேண்டும் என்பது அதன் அர்த்தமாகும். மாணவர்கள் ஆல்போல் செழித்து அருகு போல் வேர் ஊன்றவேண்டும் என்ற பழமொழிக்கு ஏற்ப ஆலமரம் செமினெரியின் சின்னமாக விளங்குகிறது.

- தொடரும்...

---

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

**Merchant Name : Indian Bible Translators**

**UPI ID : INDIANBIBLE@SBI**

BHIM UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

---

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் - செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. திட்டமிட்டபடியே கடந்த நவம்பர் மாதம் 4 மொழிபெயர்ப்பாளர்கள் கோவை IBT மையத்திற்கு வந்து, 17 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை தங்கள் மொழியிலுள்ள பழைய ஏற்பாடு பகுதிகளை சரிபார்ப்பு செய்தார்கள். இதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இங்கு செய்ததைப் போல் தங்கள் பணித்தளங்களிலும் செய்யவும், 2027 ஆம் ஆண்டில் பேஜ் செட்டிங் பணி ஆரம்பிக்கும் படியாக அனைத்துப் பணிகளையும் துரிதமாகச் செய்ய ஜெபியுங்கள்.

2. கடந்த வருடத்தில் IBT ஊழியத்தின் தேவைகளை அறிந்து, தங்கள் முழுமனதோடு கொடுத்த காணிக்கைகளால் ஊழியத்திற்கு பேருதவியாக இருந்த IBT தாங்குநர்கள், பங்காளர்களுக்காக கர்த்தரைத் துதியுங்கள். இவ்வருடத்திலும் இதே ஒத்துழைப்பைக் கொடுக்கவும், IBT ஊழியத்தைக் குறித்து அறியாதவர்களுக்கு, அறிந்தவர்கள் ஊழியத்தை அறிமுகப்படுத்தவும் ஜெபியுங்கள்.

3. தோடா மொழியில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாட்டு சங்கீதம், நீதிமொழிகள் அடங்கிய ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Aduio Device) வேண்டுமென்று பலர் கேட்டதாக அறிந்தோம். வாசிக்கத் தெரியாத மக்களும் கர்த்தரை அறிந்து அவருக்குள் வாழ இக்கருவி மிக உதவிகரமாக இருக்கும். ரூ. 400/- கொடுத்து வாங்கக் கூடியவர்கள் வாங்கவும், வசதியற்ற, இக்கருவி கிடைக்க வாஞ்சையுள்ள மக்களுக்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

4. இம்மாதம் 26-ஆம் தேதியன்று IBT-இன் ஒருநாள் கூடுகை கோவை, IBT மையத்திலேயே நடைபெற திட்டமிட்டுள்ளதால் அநேக வாலிபர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டு பயன்பெறவும் இதன் மூலமாக ஊழிய வாஞ்சை, பாரம் இவர்களுக்கு ஆவியானவர் அருளிச் செய்ய ஜெபிப்போம்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by<br>On behalf of | **Mr. K. JAISINGH**<br>**WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH**<br>Chandra Prabha Press<br>113-118, V.H. Road, CBE-1. |


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBINO282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd January 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**